| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 29/06/2024 | முதல் | 03/07/2024 | |
| | அறிக்கை எண் : | 052/ 2024 | வெளியீட்டு நாள் : | | 28/06/2024 | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (23.06.2024 முதல் 27.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –03-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/06 | 24/06 | 25/06 | 26/06 | 27/06 | தேதி | நாள்-1 29/06 | நாள்-2 30/06 | நாள்-3 01/07 | நாள்-4 02/07 | நாள்-5 03/07 |
| 5.6 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 2 | 3 | 3 |
| 39 | 37 | 36 | 37 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 34 | 35 | 34 | 33 |
| 27 | 27 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 25 | 24 | 24 |
| 6 | 6 | 6 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 8 | 8 | 8 |
| 61 | 64 | 67 | 64 | 83 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 60 | 57 | 56 | 55 | 56 | | 50 | 40 | 50 | 40 | 40 |
| 8 | 19 | 13 | 17 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 10 | 8 | 8 |
| மேற்கு | மேற்கு | வட மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் கிழக்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 1, 2 மற்றும் 3 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தெற்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(28ஜூன்- 11 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நிலக்கடலை, எள், கால்நடை**

**நிலக்கடலை:**

வைகாசி பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு மேற்கொண்ட விவசாயிகள் செடியில் விழுதுகள் அதிகமாக பிடிக்க ஜிப்சம் இட்டு (160 கிலோ/ ஏக்கர்) மண் அணைக்க வேண்டும்.

மேலும், நிலக்கடலை செடியில் அதிக காய்கள் மற்றும் மகசூல் பெற இலை வழி தெளிப்பு உரமாக நிலக்கடலை ரிச் என்ற நுண்ணூட்ட கலவையை (2 கிலோ/ 200 லிட்டர்) தெளிக்க வேண்டும்.

மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்.

**எள்:**

எள் பயிரில் (பச்சைப்பூ) பூவிலைநோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலினால் செடியின் அனைத்து பூக்கும் பகுதிகளும் பச்சை இலைகளாக மாறும், பூக்கும் பாகங்களின் நரம்புகளில் உள்ள பச்சை நிறமானது வெளிர்ந்து காணப்படும்.

தீவரமாக பாதித்த பகுதிகளில் பூக்கள் முழுவதும் சிறு சிறு இலைகளாக அடர்ந்த நிலையில், சிறிய இடைக்கணுக்களைக் கொண்டு, கிளைகள் வளைந்து காணப்படும். காய்கள் வளர்ந்தாலும் அதில் விதைகள் காணப்படாது.

இப்பூவிலை வைரஸ் நோயானது ஓரோசியஸ் அல்பிசின்டஸ் எனும் தத்துப்பூச்சியினால் பரவுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 35கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்சிக்குளோரைடு உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும்.